விமானம் தருது அசதி...! ரயில் தருவதோ வசதி

தகவல் களம்

ரயிலில் 24 மணிநேரம் பயணித்தாலும் வராத அலுப்பு விமானத்தில் வெறும் 10 மணிநேர பயணத்திலேயே ஏற்பட்டு விடுகிறது. அது ஏன் என்பது பற்றி இப்பதிவில் பார்ப்போம். இன்று உலகம் முழுவதும், சாலை போக்குவரத்து, ரயில் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, விமான போக்குவரத்து என்ற மொத்தமே 4 விதமான போக்குவரத்து தான் இருக்கிறது. இதில் ஒவ்வொரு விதமான போக்குவரத்து முறைகளிலும் ஒவ்வொரு வசதியும், நிறைகளும், குறைகளும் இருக்கின்றன.

இந்த எல்லா முறைகளிலும் அதிக செலவில் பயணம் செய்யும் முறை விமான பயணம் தான். ஒரு டிக்கெட் நிச்சயம் ஆயிரக்கணக்கில் இருக்கும். இதில் மக்கள் பெரும்பாலும் குறுகிய தூர பயணத்திற்கு சாலை போக்குவரத்தையும், நீண்ட தூர பயணத்திற்கு ரயில் போக்குவரத்தையும், கடல் கடந்த பயணத்திற்கு கப்பல் அல்லது விமான போக்குவரத்தையும் பயன்படுத்துகின்றனர். இவை எல்லாவற்றிலும் வேகமான பயணம் என்பது விமானத்தில் தான் சாத்தியம். உலகில் அதிகபட்சமே 20 மணி நேரம் தொடர்ந்து பயணிக்கும் விமானம் தான் இருக்கிறது. அதனால் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மிக வேகமாக பயணிக்க முடியும். ஆனால் மக்கள் பலர் விமான பயணத்தை விட ரயில் பயணத்தை தான் ரசிக்கிறார்கள். ரயிலில் 24 மணி நேரம் பயணம் செய்தாலும் வராத அலுப்பு விமானத்தில் வெறும் 10 மணிநேரம் பயணித்தாலே ஏற்படுகிறது.

பாதுகாப்பு சோதனை குறைவு : விமான பயணத்தில் ஒவ்வொரு முறையும் விமான நிலையத்தில் பாதுகாப்பு சோதனையை கடந்து செல்ல வேண்டும். குறிப்பாக திரவ நிலையில் உள்ள பொருட்களை குறிப்பிட்ட அளவிற்கு மேல் எடுத்து செல்ல தடை, உள்ளிட்ட பல கட்டுப்பாடுகள் உள்ளது. ரயில் பயணத்தில் அப்படியான கட்டுப்பாடு எதுவும் இல்லை.

லக்கேஜ்: விமான பயணத்தில் ஒரு பயணி குறிப்பிட்ட அளவு லக்கேஜ்களை தான் எடுத்து செல்ல வேண்டும். உதாரணமாக ஒரு பயணிக்கு 15 கிலோ என ஒதுக்கப்பட்டால் அது சரியாக 15 கிலோ அல்லது அதற்கு குறைவாகவே இருக்க வேண்டும் அதற்கு அதிகமாக 100 கிராம் கூட எடுத்து செல்ல முடியாது. ஆனால் ரயில்களில் லக்கேஜ்களுக்கான கட்டுப்பாடு இருந்தாலும், அது பெரியளவில் நடைமுறையில் இல்லை. அதனால் விமானத்தை விட ரயில்களில் அதிகம் லக்கேஜ் எடுத்து செல்ல முடியும்.

சொகுசான பயணம் : பொதுவாக விமானங்களில் உட்கார்ந்து அமர்ந்து செல்லும் வகையிலான சீட்கள் தான் இருக்கும். மிக குறைவான விமானங்களிலேயே படுத்து தூங்கி கொண்டே செல்லும் வசதி இருக்கும். ஆனால் ரயில்களை பொறுத்தவரை முன்பதிவு செய்து செல்லும் ரயில்களில் எல்லாம் படுத்து தூங்கி கொண்டே பயணிக்கும் வசதி இருக்கிறது.

சுத்தமான காற்று: விமானங்களில் எல்லாம் ஏசி பொருத்தப்பட்டிருக்கும். இயற்கை காற்றை சுவாசிப்பது என்பது நடக்காத ஒன்று. வெளிக்காற்று விமானத்திற்குள் வர முடியாதபடி கட்டமைக்கப்பட்டிருக்கும். ஆனால் ஏசி பிடிக்காதவர்களுக்கு ரயில் வரப்பிரசாதம் தான். இங்கு ஏசி வசதி கொண்ட பெட்டிகளும் உள்ளன. இயற்கை காற்றை சுவாசித்து கொண்டே பயணிக்கும் வகையிலான பெட்டிகளும் உள்ளன.

குறைவான கட்டணம்: ரயில்களில் நீண்ட தூர பயணம் செய்தாலும் செலவு குறைவாக தான் இருக்கும் சில நூறு ரூபாய்களில் இந்த பயணத்தை சாத்தியமாக்க முடியும். ஆனால் விமானம் என்றால் குறைந்தபட்ச செலவே ஆயிரத்தில் இருக்கும். இதனால் விமானங்களில் பணம் இல்லாதவர்களால் பயணிப்பது சிரமம்

பாதுகாப்பு நிறைந்தது: பயணங்கள் என்றாலே ஆபத்துகள் இருக்கும் என்றாலும், விமானங்களை விட ரயில்கள் தான் பயணத்தில் பாதுகாப்பு நிறைந்தது. விமானங்கள் பூமிக்கு மேலே பல ஆயிரம் அடி உயரத்தில் பறப்பதும், தரையிறங்குவது, டேக் ஆப் ஆவதும் ஆபத்து நிறைந்தது. ரயில் பயணங்களில் பெரியயளவில் ஆபத்துகள் எதுவும் இல்லை. பாதுகாப்பாக பயணிக்க முடியும்.

மறைமுக கட்டணம்: ரயில் பயணத்திற்காக டிக்கெட் மட்டும் எடுத்து கொண்டால் போதும். வேறு எந்த மறைமுக கட்டணமும் கிடையாது. ஆனால் விமானங்களில் சீட்களை தேர்வு செய்வது, எக்ஸ்ட்ரா லக்கேஜ் என ஏகப்பட்ட விஷயத்திற்கு தனியாக கட்டணம் வசூலிக்கப்படும். ரயில்களில் இப்படியாக எந்தவித கட்டணமும் கிடையாது.

உடல் அலுப்பு: மனித உடல் மணிக்கு 500 மைல் வேகம் மற்றும் கடல் மட்டத்திலிருந்து 35 ஆயிரம் அடி உயரத்திற்குள் இருக்கும் வரை தான் இதை ஏற்றுக் கொள்ளும், அதை விட எது அதிகம் ஆனாலும் உடலுக்கு கொஞ்சம் கொஞ்சமாக பிரச்னை ஏற்படும் பலருக்கு செரிமாண கோளாறுகள், தூக்க நேரம் மாற்றம், ரத்த ஓட்டம், நோய் எதிர்ப்பு திறன் உள்ளிட்ட பல பிரச்னைகள் ஏற்படும். க்ரோனிக் பிரச்னை இருப்பவர்களுக்கு விமான பயணம் சங்கடமாக தான் இருக்கும். இதனால் ரயிலில் 24 மணிநேரம் பயணம் செய்தாலும் ஏற்படாத அலுப்பு விமானத்தில் 10 மணி நேர பயணத்திலேயே ஏற்பட்டு விடும்.



காத்திருப்பு நேரம்: விமான பயணம் நேரம் குறைவாக இருந்தாலும் விமானம் புறப்படுவதற்கு சுமார் 2 மணிநேரத்திற்கு முன்பாக நாம் விமான நிலையத்திற்கு வரவேண்டும். அப்போது தான் முந்தைய நடைமுறைகளை முடித்துக் கொண்டு விமானத்தில் ஏற வசதியாக இருக்கும். ஆனால் ரயில் நிலையத்திற்கு கடைசி நிமிடத்தில் சென்றாலும் ரயிலை பிடித்து விட முடியும். விமான நிலையத்தில் பல நேரங்களில் பயண நேரத்தை விட காத்திருப்பு நேரம் அதிகமாக இருக்கும்.

நகருக்குள் இறங்கலாம்: பொதுவாக விமான நிலையங்கள் நகர் பகுதியிலிருந்து வெளியே அமைக்கப்படும். ஆனால் ரயில் நிலையங்கள் நகரின் மையத்தில் அமைக்கப்பட்டிருக்கும். அதனால் ரயிலில் பயணித்தால் நகரின் மையப்பகுதிக்குள் இறங்கலாம். ஆனால் விமானத்தில் பயணித்தால் விமான நிலையத்திலிருந்து ஊருக்குள் செல்ல வேறு ஒரு வாகனத்தை பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

கழிப்பறை வசதி: விமானங்களில் கழிப்பறை இருந்தாலும் அது மிகச்சிறியதாக பயன்படுத்துவதற்கு சிரமமாக இருக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் ரயில்களில் பொதுவாக வசதிகளுடன் கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் விமானங்களை விட ரயிலில் தான் கழிப்பறைகள் சிறப்பாக இருக்கிறது.

நடைபயிற்சி செய்யலாம்: சில வயதானவர்களுக்கு நீண்ட நேரம் அமர்ந்திருக்கவோ, படுத்திருக்கவோ, நிற்கவோ நடக்கவோ முடியாது. கொஞ்ச நேரம் அமர்ந்திருந்தால் கொஞ்சம் நடமாட வேண்டும். பின்னர் கொஞ்சம் படுக்க வேண்டும். இது எல்லாம் விமானத்தில் சாத்தியமே இல்லை. ஆனால் ரயில்களில் இந்த வசதி இருக்கிறது பயணிகள் நடக்கலாம். அமரலாம் படுக்கலாம் எல்லா விதமான வசதியும் ரயில் மட்டுமே இருக்கிறது.

இன்டர்நெட் கனெக்ஷன்: விமான பயணத்தில் பெரும்பாலும் இன்டர்நெட் கனெக்ஷன் இருக்காது. அதனால் வெளி உலகின் தொடர்பு இல்லாமல் தான் பயணிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும். ஆனால் ரயில்களில் அப்படியல்ல. எப்போதும் போல செல்போனை பயன்படுத்த முடியும். இன்டர்நெட் வசதி இருக்கும்.

நாட்டின் எந்த மூலைக்கும் பயணிக்கலாம் இந்தியாவை பொருத்த வரை பெரும்பாலான ஊர்கள் ரயில்களால் இணைக்கப்பட்டு விட்டன. அதனால் ரயில்களில் எந்த ஊருக்கு வேண்டுமானாலும் பயணிக்க முடியும். ஆனால் விமானங்கள் எல்லா ஊர்களிலும் இல்லை. பெரிய பெரிய ஊர்களில் மட்டுமே இருக்கிறது. இதனால் அந்தந்த ஊர்களுக்கு செல்ல அருகில் உள்ள பெரிய ஊரில் உள்ள விமான நிலையத்திற்கு சென்று அங்கிருந்துதான் மாறி செல்ல வேண்டும்.

கொண்டாட்டத்திற்காக
போடப்பட்ட பந்தல்
விருந்தாளிகள் சென்ற பின்
தனிமையில்
-பூ.அருள், எரியோடு.

வேடிக்கை காட்டும்
விளக்குகள்
விலையை சொல்கிறது
பிரகாசமாய்
-க.தண்டாயுதபாணி, சிவகங்கை.

வண்ண வண்ண விளக்குகள்
அந்தரத்தில் தொங்குது
கண்ணால் பார்க்கையிலே
மனதில் ஆனந்த
வெளிச்சம் பொங்குதே
-பா.ஜெயப்பிரகாஷ், அரண்மனைபுதூர், தேனி.

வண்ண வண்ண விளக்குகள்
வானத்திலே பூத்ததோ
கண்ணை கவரும் வகையிலே
கடையில் சிரிக்குது களிப்பூட்ட
-மேகதாசன், திண்டுக்கல்.

பல விதமான வண்ண நிறங்களும்
காகித விளக்குடன் ஒன்றோடன்று
உரசி கொண்டு நாம் பிரியாமல்
அனைவரும் சேர்ந்தே இருப்போம்
என்று சொல்லுகிறதோ
-கே.சாந்தினி, கிருஷ்ணராஜபுரம், மானாமதுரை.

எண்ணம் போல் வாழ்வு பெற
வண்ண விளக்குகளால்
வரவேற்பு
-சுபா, ராமேஸ்வரம்.

தரையில் விளையாட்டு
இப்போது இல்லை
கலர்புல் விளையாட்டு
காண்க மேலே
-எம்.மனோகரன், ராமநாதபுரம்.

கண் கொள்ளா காட்சி
குழந்தைகள் கண்டு களிப்பு
-மு.விஜயராணி, எஸ்.கொடிக்குளம், ராமநாதபுரம்.

வண்ண வண்ண தோரணம்
மின் மினி பூச்சிகளாய்
- மா.ஆ.அ.கிருஷ்ணசாமி, சிவகாசி.

அலங்கார விளக்குகளோ
அங்காடியில் பூத்திருக்கு
விற்போரும் காணவில்லை
வாங்கி வர யாருமில்லை
- ராஜாமணி, காரைக்குடி.

மின்னொளியின் விளக்குகள்
விண்வெளியில் ஒரு பகுதியாய்
- சந்திரகாந்த், சாயல்குடி.

பந்தலில் பளபளக்கும்
விளக்குகள் இவை
பகலாய் மாற்ற
- சுந்தரம், மதுரை.

காகித கைவினை பொருள்
கச்சிதமாய் நீக்குகிறது
இருள்...!
- சதீஷ், மேலூர்.

பளிச்சிடும் விளக்குகளில்
பிரகாசிக்கிறது திருவிழாக்கள்
- ரஞ்சனி, பழநி.

ஒளியில் மிதக்கிறது
உன்னத அழகு
- ராணி, உசிலம்பட்டி.

வண்ண விளக்குகள்
கண்ணை கவர்கிறது
திருவிழா காலங்களில்
- மீனா, விருதுநகர்.

வணக்கம் வாசகர்களே...

இந்த படத்தை பார்த்ததும் உங்கள் மனதில் தோன்றும் 'பஞ்ச்' கவிதைகளை 3, 4 வரிகளுக்குள் 'நச் வரிகள்' என குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி
தகவல் களம்
தினகரன் நாளிதழ், 2/2, மேலூர் மெயின்ரோடு, உத்தங்குடி, மதுரை - 625 023

மாணிக்க நாச்சி அம்மன் கோயில் திருவிழா

திருப்புத்தூர், ஏப்.25: திருப்புத்தூர் அருகே கண்டரமாணிக்கம் மாணிக்க நாச்சி அம்மன் கோயில் சித்திரைத் திருவிழா கடந்த ஏப்.16ம் தேதி காப்புக்கட்டுதலுடன் தொடங்கியது. அன்றிலிருந்து சாமிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் நடைபெற்று பத்து நாள் திருவிழா நடைபெற்று வருகிறது. தினமும் பல்வேறு மண்டகப்படி நடைபெற்று சுவாமி திருவீதி உலா நடைபெற்றது. 8ம் நாள் திருவிழாவாக நேற்று முன்தினம் மாலை திருத்தேரோட்டம் நடைபெற்றது. 9ம் திருவிழாவான நேற்று காலை 10 மணிக்கு கோயில் அருகே கூடிய ஆயிரக்கணக்கான பக்தர்கள் பால்குடம் சுமந்தும், அலகு குத்தியும் கோயிலை வலம் வந்து தெற்குபட்டு மூலஸ்தானத்திற்கு பால்குடங்களுடன் சென்றனர். அங்கு கோயில் முன் அமைக்கப்பட்டிருந்த பூக்குழியில் இறங்கினர். தொடர்ந்து பக்தர்கள் எடுத்து வந்த பாலால் அம்மனுக்கு அபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து தெற்குபட்டு மூலஸ்தானத்திலிருந்து திருத்தேர் சப்பரத்தில் சாமி கோயில் வந்தடைந்தது. 10ம் நாள் நிகழ்வாக இன்று மஞ்சு விரட்டு நடைபெற உள்ளது. இரவு பூப்பல்லக்கில் புஷ்ப அலங்காரத்தில் சுவாமி திருவீதி உலா நடைபெற உள்ளது. இக்கோயிலின் சித்திரைத் திருவிழாவில் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் மாவிளக்கு வைத்தும் கரும்புத் தொட்டில் எடுத்தும் நேர்த்திக் கடனை செலுத்தினர்.

திருப்புத்தூர் அருகே கண்டரமாணிக்கம் மாணிக்க நாச்சி அம்மன் கோயிலில் பால்குடம் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்.

அலகு குத்தி நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்
CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர்மார்க் R.G.கட்காரி சவுக், தாதர் (மேற்கு), மும்பை–400028.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com | தொலைபேசி: 044–24323033
அதிகாரபூர்வ அதிகாரி கைபேசி எண். 9344684194/ 9884062068
[விற்சேர்க்கை-IV-A]
[விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்து விற்பனைக்கான மின்-ஏலம் பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6 r/w 9 (1) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சர்பாசி சட்டம்") கீழ் அசையும்/ அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு
இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்கீழ் பெயரிடப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, அது ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (OARPL), மேலும் கீழே உள்ள கணக்குகளின் முழு நிலுவையில் உள்ள கடன்களையும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட் (OARPL) (ஓம்காரா PS 22/2020–21 ஒப்பந்தங்கள் மூலம் பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படும்)
உடமைப் பத்திர ஒப்பந்த தேதி 26.02.2021 யிலிருந்து ஃபுல்லர்டோன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (உரிமைப்பட்ட நிறுவனம்) இன்படி OARPL இன் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, OARPL ஆனது நிலுவைகளை வசூலிக்க மேலும் கடனீடுகளை அமலாக்கம் செய்ய உரிமை பெற்றுள்ளது பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) சர்பாசி விதிகளின் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி; கீழ்க்காணும் சொத்தை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கடனீட்டு கடனீந்தோராக OARPL நிலுவையில் கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக, "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா அடிப்படையில்" விற்பனை செய்யவுள்ளது. பிரிவு 13(2) இன் கீழ் அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பின்படி சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள்/ ஜாமின்தாரர்கள்/ அடமானதாரர்கள் விவரம், கடனீட்டு கடனீந்தோர், உரிமையாளர், நிலுவைத் தொகை, சொத்தின் சுவாதீன தேதி, நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை, நாள் மற்றும் நேரம் ஆகியவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களின் பெயர்	திருமதி. லஷ்மி P, க/பெ: திரு.பழனிவேல்ராஜன் M மற்றும் திரு. பழனிவேல்ராஜன் M, த/பெ: திரு.முனியாண்டி

கடனீட்டு சொத்து விவரம்: திருமதி. லஷ்மியின் P, க/பெ: பழனிவேல்ராஜன் M – சொத்து: 20.08.2018 தேதியிட்ட விற்பனை பத்திர ஆவண எண். 3144/2018, திருப்பரங்குன்றம் சார் பதிவு அலுவலகம் மதுரை தெற்கு பதிவு மாவட்டம், திருப்பரங்குன்றம் சார்பு மாவட்டம், மதுரை தெற்கு வட்டத்தில் நடப்பில் மதுரை மேற்கு வட்டம், விளாச்சேரி கிராமத்தில், புன்செய் சர்வே எண் 365/15, பரப்பளவு 52 சென்ட் மேற்குப் பக்கம், 19 சென்ட்கள் தெற்குப் பக்கம், 3 சென்ட்கள் கிழக்குப் பக்கம், 640 சதுரடி. அமைந்துள்ள காலி மனை, R.C.C. கட்டடம் கட்டப்பட்ட கதவு எண்கள் 3/94, 3/94A நான்கு எல்லைகள் வடக்கில்: கிருஷ்ணமூர்த்தி மனை மற்றும் வீடு மேலும் 3 அடி சந்து, கிழக்கில்: தென் வடல் பாதை, தெற்கில்: சந்தனம்மாள் வீடு, மேற்கில்: அழகர்சாமி மனை மற்றும் வீடு. இதற்கிடையில் கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம்–32 அடி, தெற்குப் பக்கம்–32 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கம்–20 அடி, மேற்குப் பக்கம்–20 அடி 640 ச.அடி நிலம் மற்றும் அதில் கட்டப்பட்ட R.C.C. கட்டடம், கதவுச் சட்டங்கள், கதவுகள், ஜன்னல்கள், அலமாரிகள், மின் இணைப்பு எண் 05–144–016–426, 05–144–016–295 மற்றும் அதன் வைப்புத்தொகை குடிநீர் வழங்கல் குழாய் இணைப்பு, கழிவறை, குளியலறை, கீழ்ப்பகுதி, மேல் பகுதி, காலி மனைகள் அனைத்து பயன்பாட்டு உரிமைகள் உட்பட.

சொத்தின் உரிமையாளர்	திருமதி. லஷ்மி P, க/பெ: திரு.பழனிவேல்ராஜன் M
கோரிக்கை அறிவிப்பு நாள்	04.04.2022
கையக சுவாதீன நாள்	18.10.2023
நிர்ணய விலை	ரூ. 12,60,000/– (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்)
முன்வைப்பு தொகை	ரூ. 1,26,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து ஆறாயிரம் மட்டும்)
ஏலம் உயர்த்தும் தொகை	ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)
சொத்து பார்வையிடல் நாள் மற்றும் நேரம்	08.05.2024 (புதன்கிழமை) காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
23.04.2024 வரை உள்ள நிலுவை தொகை	ரூ. 32,37,101/– (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து நூற்று ஒன்று மட்டும்)
கணக்கு விவரம்	கணக்கு எண்:– 344905000929, பயனாளி பெயர்:– ஓம்காரா PS22/2020–21, டிரஸ்ட், வங்கி பெயர்:– ஐசிஐசிஐ வங்கி, கிளை: பாந்த்ரா (கி) மும்பை, ஐஎஃஎஸ்சி குறியீடு: ICIC0003449
மின் ஏலத்தேதி மற்றும் நேரம்	22 மே 2024 (புதன்கிழமை) காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை
ஏல விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்/ கேஒய்சி ஆவணம்/ முன்வைப்பு தொகையின் ஆதார ஆவணம்	20 மே 2024 மாலை 4 மணி அல்லது அதற்கு முன்பாக

ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனை விண்ணப்பத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டு கடனீந்தோரின் (OARPL) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநரின் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com ஐ பார்வையிடவும்

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) கீழ் r/w 9(1) விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு
இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர் / ஜாமின்தாரர்களுக்கு கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6), r/w 9(1) மற்றும் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிகளின் கீழ், செலவு & செலவினங்களுடன் சேர்த்து இங்கே மேற்குறிப்பிட்டவாறு நிலுவைத்தொகைகளை செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்கும் அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறுவது குறித்து தகவல் அளிக்கும் 30 (முப்பது) நாட்கள் கட்டாய அறிவிப்பும் ஆகும். பணம் செலுத்தத் தவறினால், நிதிச்சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் புனரமைத்தல் மற்றும் 24.04.2024 முதல் கூடுதல் வட்டியுடன் சொத்துகளை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் மின்–ஏலத்தின் மூலம் செயல்படுத்தவும் அதிகாரப்பூர்வ அதிகாரி /கடனீட்டு கடனீந்தோரின் தனிவிருப்ப முடிவில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(கார்த்தி கோவிந்தசாமி)
கைபேசி எண். 9344684194
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)
நாள்: 25.04.2024
இடம்: சென்னை

இன்று முதல் கால்பந்து பயிற்சி

சிவகங்கை, ஏப்.25: சிவகங்கையில் கால்பந்து பயிற்சி முகாம் இன்று முதல் ஒரு மாதம் நடக்க உள்ளது. சிவகங்கை கால்பந்து கழகம் சார்பில் 19வது ஆண்டு கோடை கால பயிற்சி முகாம் இன்று முதல் மே 25ம் தேதி வரை காலை 6.30 மணி முதல் 8.30 மணி வரையும், மாலை 5 மணி முதல் 6.30 மணி வரையும் சிவகங்கை மாவட்ட விளையாட்ட ரங்கம் மற்றும் சிவகங்கை மன்னர் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளுக்கு சீருடை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். கூடுதல் தகவல் அறிய 86752 16868, 97895 39151 என்ற செல் எண்களில் தொடர்பு கொள்ளலாம்.